'ஹோப்' கப்பல் டாக்டர்கள், தாதிகள் யாழ்ப்பாணம் வருகிறார்கள்

Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49 மலர் 10
போன் 389 National Tamil Daily இதழ் 99
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் சேக வைகாசி 7 ஸபர் 21 திங்கட்கிழமை (20-5-68)

யாழ்ப்பாணம், திங்கள் 'ஹோப்' டாக்டர்களும், தாதிகளும் யாழ்ப்பாண நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பார்கள்.

கொழும்பில் தங்கி நிற்கும் அமெரிக்க வைத்தியக் கப்பலான 'ஹோப்'பில் வந்த 3 டாக்டர்களும், 3 தாதிகளும் அடுத்த மாதப் பிற்பகுதியில் இங்கு வர விருப்பதே இதற்குக் காரணம்.

சத்திர சிகிச்சையிலும், வைத்திய சிகிச்சையிலும் விசேஷ தகமைபெற்ற இந்த டாக்டர்களும், தாதிகளும் சுமார் ஒன்றரை மாதகாலம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிப்பார்கள்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் 9 பிரதம தாதிகளும், மாணவ தாதிகளும் 'ஹோப்'பில் பயிற்சிபெறத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள். அடுத்த மாதம் 20ந் தேதி இவர்கள் 'ஹோப்'பில் பயிற்சி பெறச் செல்வார்கள்.

[கா. நி.]

"வீடுகளில் புகுந்து சோதனை போடுவதை நிறுத்தவேண்டும்

காணாமற்போன தாதி வேலை நீக்கம்

யாழ்ப்பாணம், திங்கள் மந்திகை ஆஸ்பத்திரியிலிருந்து அண்மையில் காணாமல் போன கனகம்மா என்ற ஆஸ்பத்திரிதாதிவேலையிலிருந்து தற்காலிக நீக்கம் செய்யப்பட்டுள்ளார் இதனை ஆஸ்பத்திரி அதிகாரி அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் காணாமல் போன இந்தத் தாதிபற்றிய பல தகவல்கள் பொலிசாருக்குக் கிடைத்தபோதும் இவர் இன்னமும்கைது செய்யப்படவில்லை.

இப்பெண்ணுடன் தொடர்புகொண்டுள்ளவர் என்று கூறப்படும் மந்திகை ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியரான தங்கமயிலுவும் இன்னமும்வேலைக்குச் செல்லவில்லை.

கடைசியாக சுன்னாகத்திலிருந்து வைத்திய லீவு கோரி தங்கமயிலு விண்ணப்பித்த கடிதம் வைத்திய அதிகாரிக்குக் கிடைத்துள்ளது.

காணாமல் போன கனகம்மாவைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (கா. நி.)

பாவனைப்பொருள் அதிகரிப்பு 'கடத்தல் பெயரை' நீக்காது"

தீவுப்பகுதி எம். பி. பேச்சு

யாழ்ப்பாணம், திங்கள் "பாவனைப் பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் அவற்றின் தொகையை அதிகரிப்பதோ, இலங்கை முழுவதும் பரவலாக்குவதோ, எமக்கு அவசியமல்ல. இச்சட்டத்தின்கீழ் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் வீடுகளை எந்த வேளையிலும் சோதனையிட வழங்கப்பட்ட அதிகாரம் தான் உடனடியாக நீக்கப்படல்வேண்டும்."

இவ்வாறு நேற்று இரவு புங்குடுதீவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தீவுப்பகுதி எம். பி, திரு. வி. நவரத்தினம் தெரிவித்தார்.

புங்குடுதீவு வல்லன் சண்முகநாதன் வித்தியாசாலை பழைய மாணவர் சங்க முதலாவது ஆண்டு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் "வடபகுதிப் பாவனைப் பொருள்கட்டுப்பாடு" பற்றி திரு வி. நவரத்தினம் எம். பி. மேலும் பேசியதாவது:

பாராளுமன்றத்தில் கடந்த 23-ம் திகதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அவசர காலச்சட்டத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்படப்போகும் அபாயத்தையும், இராணுவத்தினரும், பொலிஸாரும் செய்யக்கூடிய அட்டூழியம் பற்றியும் நான்பேசியபோது தமிழரசு எம். பி. க்களும், பொதுச்செயலாளரும் கேட்டுக்கொண்டிருந்தனர். ஆனால் திரு. அமிர்தலிங்கம் இது பற்றிப்பேசுகையில், "இப்போ சில காலமாக

[6-ம் பக்கம் பார்க்க]

நேர்முகப் பரீட்சையின் பின்பே நியமனம்

யாழ்ப்பாணம், திங்கள் அண்மையில் நடைபெற்ற மாணவ ஆசிரியர் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு நேர்முகப்பரீட்சைநடைபெற்ற பின்னரே நியமனம் வழங்கப்படுமாம். அதுவரை நியமனங்கள் வழங்கப்படமாட்டாதெனத் தெரிகிறது.

இப்பரீட்சையில் சித்தியடைந்தவர்கள்பற்றிய விபரங்கள் அவர்களது புள்ளிகளுடன் அவ்வப்பகுதி எம். பி.க்களுக்கு தொகுதி வாரியாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதியிலும் பொதுப் பாடங்களுக்கு 3 பேரும், விஞ்ஞானம், வர்த்தகம், மனையியல், விவசாயம், ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கு தலா ஒருவர் வீதமும் மாணவ ஆசிரியர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

ஆனால் இத்தெரிவுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் எந்தவித தொடர்பும் இல்லையென்றும் கிளிநொச்சி எம். பி. திரு.கா. பொ. இரத்தினம் நேற்று தெரிவித்தார். (கா. நி)

விவசாயிகளுக்கு

கிணறு தோண்டுவதற்கு கடனுதவி திட்டம்

வவனியாவில் மந்திரி பண்டா தகவல்

வவனியா, ஞாயிறு விவசாயிகளுக்கு நீர்ப்பாசன உதவிகள் செய்யவதற்கான கடன் உதவித் திட்டம் ஒன்றை அரசாங்கம் விரைவில் கொண்டுவரும்.

இத்தகவலை இன்று வவனியாவுக்கு விஜயஞ்செய்த விவசாய அமைச்சர் திரு. எம். டீ. பண்டா கச்சேரியில் இடம்பெற்ற மாவட்ட விவசாய இணைப்புக்குழுக் கூட்டத்தில் பேசுகையில் வெளியிட்டார்.

இத்திட்டத்தின்படி கிணறுகள் தோண்டவும், நீர் இறைக்கும் யந்திரங்கள் கடனாகக் கொடுத்துதவவும் ஏற்பாடுகள் செய்யப்படுமென்று மந்திரி மேலும் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில், வவனியா விவசாயிகள் விவசாயத்தில் முன்மாதிரியாக விளங்குவதாகவும், கடந்த பெரும் போகத்தில் ஐந்தரைக் கோடி புசல் நெல்லை அரசாங்கம் உத்தரவாத விலைக்கு வவனியா விவசாயிகளிடமிருந்து வாங்கியுள்ளதாகவும், மேலும் 7 கோடி புசல் நெல் வாங்கப்படும் என்றும் கூறினார்.

பெரும் போகத்தில் புழுதி

[6-ம் பக்கம் பார்க்க]

இளம்பெண்ணைக்காணவில்லை

தாய் மரணம் தந்தை கைது

யாழ்ப்பாணம், திங்கள் இருபத்து மூன்று வயது இளம் பெண் கடத்திச் செல்லப்பட்டாராம். இதனைத் தொடர்ந்து இப்பெண்ணின் தாய் வீட்டில் இறந்துகிடக்கக்காணப்பட்டார். சந்தேகத்தின் பேரில் மரணமான பெண்ணின் கணவனை பொலிசார் கைது செய்து பொலிஸ் பாதுகாப்பில் வைத்துள்ளனர்.

புத்தூர் கிழக்கில் நடைபெற்ற இப் பரிதாப சம்பவத்தில் 8 பிள்ளைகளின் தாயான தில்லையர் அபிராமி என்பவரே (53 வயது) மரணமானவராவார். இதுசம்பந்தமாக மரண விசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருக்கும் மரணமானவரின் கணவனான கரிதர் தில்லையந் சாட்சிமளிக்கையில் தெரிவித்ததாவது:

மரணமானவரை 30

(6-ம் பக்கம் பார்க்க)

நாகேஷ் மைத்துனர் கொலை வழக்கு:

உயர் நீதிமன்ற விசாரணைக்கு வழக்கு தாக்கல்

12வது எதிரி பிணையில் செல்ல அனுமதி

சென்னை, மே 19 நகைச்சுவை நடிகர் நாகேஷ் மைத்துனர் கொலை வழக்கில் எதிரியாகவுள்ள அனைவரையும் ஜோர்ஜ் டவுன் 2-வது மாகாண மாஜிஸ்திரேட் மாவட்ட செஷன்ஸ் [உயர் நீதிமன்றம்] நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவதற்காக பாரப்படுத்தியுள்ளார். இந்த வழக்கில் நடிகர் நாகேஷின் மைத்துனர் செல்வராஜ் என்பவரை கொலைசெய்ததாக 11 பேர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. 12-வது நபரான எதிரி ஒருவர் மீது சாட்சியங்களை மறைத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. கொலையுண்டவரின் சகோதரியும் நடிகர் நாகேஷின் மனைவியுமான திருமதி ரெஜினா இந்த வழக்கில் முதல் எதிரியாக குற்றஞ் சாட்டப்பட்டுள்ளார். வழக்கை பூர்வாங்கமாக விசாரணை செய்த மாகாண மாஜிஸ்திரேட் விசாரணையை செஷன்ஸ் நீதிமன்றத்துக்கு பாரப்படுத்தினார். 11 எதிரிகளும் கொலைக் குற்றச் சாட்டின் மீது விசாரிக்கப்படுவார்கள். 12 வது எதிரி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

துணியுங்கள்-துணியுங்கள். இந்த உலகையே வென்று ஆளப் பிறந்தவர்கள் நாம் என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள்.

—விவேகானந்தர்

ஈழநாடு
Eelanadu National Tamil Daily
Telegram: EELANAD Jaffna
Post Box 49 Jaffna
Telephone 389

யாழ்ப்பாணக் கீலகவருஷம் வைகாசி மாதம் 7-ந் திகதி (20-5-68)

மாணவர் அமைதியின்மை

பாரிசில் மாணவர் கலகம், மாட்ரிட்டில் மாணவர் குழப்பம். டப்ளினில் மாணவர் ஆர்ப்பாட்டம், மிலானில் மாணவர் வேலைநிறுத்தம் லண்டனில், தென் அமெரிக்காவில் மாணவர் ஆர்ப்பாட்டம், வேலைநிறுத்தம் இப்படி எங்கும் மாணவர் அமைதியின்மை பற்றியே செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மாணவர்கள் தான் உலகத்துக்கு வழிகாட்டும் அடுத்த சந்ததியினர், தலைவர்கள். அவர்களின் அமைதியின்மை உலகத்தின் அமைதிக்கே ஆபத்தாகலாம்.

இந்தோனேஷியாவில் மாணவர்கள் பல நாட்கள் தொடர்ந்து பெரும் கிளர்ச்சிகளும் குழப்பங்களும் நடத்தி அங்கு ஆட்சிபீடத்திலேயே மாற்றம் செய்தனர். இந்தியாவில் பல ராஜ்யங்களிலும் சென்ற பொதுத் தேர்தலுக்கு முன் மொழிப் பிரச்னை, பிரதேசப் பிரச்னை, உருக்காலை நிறுவும் பிரச்னை இப்படி பல காரணங்களை முன்வைத்து ஆர்ப்பாட்டங்களையும், கிளர்ச்சிகளையும் நடத்தினர். உலகின் ஒரு சில இடங்களில் சிறிது சிறிதாக நடந்துவந்த மாணவர் கிளர்ச்சி இப்போது உலகின் பல பகுதிகளிலும் சிறு சிறு விஷயங்களுக்கும் பெரிய கிளர்ச்சிகளாகவும் பெரும் குழப்பங்களாகவும் விரிந்து ஒரு தொற்று வியாதிபோல் பரவத் தொடங்கியிருக்கிறது. மாணவர் ஆர்ப்பாட்டங்களும் கிளர்ச்சிகளும் எங்கு நடந்தாலும் அந்த இடங்களில் உயிருக்கும் உடைமைகளுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்திவிடுகிறது. கல் வீச்சு, கார்கள், போக்குவரத்து வாகனங்கள் கட்டிடங்கள் ஆகியவைகளுக்குத் தீ வைத்தல், அரசாங்கக் காரியாலயங்களுக்குள் நுழைந்து தஸ்தாவேஜுகளை அழித்தல் முதலிய சம்பவங்கள் கிளர்ச்சிகளில் முக்கிய நிகழ்ச்சிகளாக இடம்பெற்றுவிடுகின்றன. இதனால் அந்த மாணவர்களுக்கும், அவர்களுடைய பெற்றோர்களுக்கும், அவர்களின் நாடுகளுக்கும் கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்படுகின்றன.

மாணவர்கள் இத்தகைய கிளர்ச்சிகளிலும் வன்முறைச் செயல்களிலும் ஈடுபடுவதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு குறைகள் இல்லையென்றோ தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ள அவர்கள் விடுக்கும் கோரிக்கைகளில் நியாயமில்லையென்றோ சொல்லிவிட முடியாது. மாணவர்களின் குறைகளை அறிந்து ஆராய்ந்து அவற்றை நிவர்த்தி செய்யவேண்டியது மாணவர்களின் ஆசிரியர்கள், கல்லூரி அதிபர்கள், பெற்றோர்கள் அந்தந்த நாட்டு அரசாங்கங்களின் கடமையும் பொறுப்புமாகும். பெரியவர்கள் தங்கள் கடமைகளில் தவறுவதுதான், மாணவர்கள் இத்தகைய செயல்களில் ஈடுபடுவதற்குப் பெரிதும் காரணமாகும்.

இதே சமயம் அரசியல் ஆதிக்கத்துக்காகவும்தேர்தலில் வெற்றி ஈட்டுவதற்காகவும் சுலபத்தில் உணர்ச்சியைத் தூண்டிவிடக்கூடிய மாணவர்களை —இளைஞர்களைப் பயன்படுத்தும் அரசியல்வாதிகளும் மாணவர்களின் கிளர்ச்சி மனப்பான்மைக்குப் பொறுப்பாளிகள் என்று சொல்லலாம்.

நம் நாடுகளில் முன்னர் இருந்துவந்த குருகுலக் கல்வி முறையும், குரு சிஷ்யப் பழக்கவழக்கங்களும் இன்றும் பின்பற்றி வந்தால் இத்தகைய கிளர்ச்சிகள் நீக்கப்படுவது மட்டுமல்ல, பண்புள்ள சமுதாயமும் உருவாகும்.

அடுத்த மாதம் குடியேற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

அச்சுவேலி சிறுபான்மைத் தமிழர் வீட்டுக்குடியேற்றத் திட்டத்தில் குடியேற தேர்ந்தெடுத்தெடுக்கப்பட்ட 54 குடும்பங்களும் அடுத்த மாதம் 5-ம் திகதி குடியேற்றப்படவுள்ளனர்.

உள்ளூராட்சி அமைச்சர் திரு எம். திருச்செல்வம் இக்குடியேற்றத்தை ஆரம்பித்துவைப்பார். அச்சுவேலியில் மேலும் ஒரு வீடமைப்புத் திட்டத்தை உள்ளூராட்சி அமைச்சு மேற்கொள்ளவிருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். [கா. நி.]

6 கிராமசபை தேர்தல்கள்

யாழ்ப்பாணம் திங்கள்

அடுத்தமாதம் 2-ம் திகதி வரை வடபகுதியில் பின்வரும் கிராமசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

23-ம் திகதி மயிலிட்டி; 25-ம் திகதி தெல்லிப்பழை; 30-ம் திகதி சாவகச்சேரி; 31-ம் திகதி செம்பியன் பற்று, ஜூன் மாதம் 2-ம் திகதி கைதடி, நாவற்குழி கிராமசபைகள். [கா. நி.]

இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இன்று நடைபெறும் ஸ்ரீ ஞானசம்பந்தர் மஹோற்சவ நிகழ்ச்சிகள்: காலை 10 மணி விஷேட பூசை. நண்பகல் 12 மணி அன்னதானம், மாலை 3 மணிக்கு மங்கள இசை. மாலை 5 மணி திருவுலா, மாலை 6-30 மணி கைலாசநாத சுவாமி கோவிலில் பல்லக்கு உற்சவம் இரவு 9 மணி ஆதீனம் திரும்புதல். இரவு 10 மணி திருமுறைக் கச்சேரி.

பர்மாவில் இறந்தவர் 1073 பேர்

ரங்கூன் மே 19

பர்மா கரையோரத்தில் கடந்த சில தினங்களுக்கு முன் ஏற்பட்ட சூறாவளியில் இறந்தவர்களின் எண்ணிக்கை 1073 பேர் என்று இப்போது கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

சிவாலய வழிபாட்டால் தீவினைகளை குறைக்கலாம்

மதுரை திருஞானசம்பந்த ஆதீனகர்த்தா செய்தி

யாழ்ப்பாணம், திங்கள்

"இந்தியா முழுவதும் பிற சமயங்களால் பெரிதும் பாதிக்கப்பெற்று இருக்கோவில் வழிபாடும். பொலிவழகும் குன்றியிருந்த 7ம் நூற்றுண்டில், சிவபெருமான், திருஞானசம்பந்தரை இவ்வுலகில் அவதரிக்குமாறு செய்து வேதநெறி தழைத்தோங்கவும், சைவத்துறை பொலிவுற்று விளங்கவும் அருள் செய்தார்."

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் ஞானசம்பந்தர் விழாவிற்கு, மதுரை திருஞானசம்பந்தர் ஆதீன கர்த்தா அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

ஸ்ரீமத் சுவாமிநாததம்பிரான் சுவாமிகளுக்கு அனுப்பப்பட்டுள்ள இவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

நமது இந்து மதத்திற்கு எப்பொழுதெல்லாம் ஆபத்துக்கள் ஏற்படுகின்றனவோ அப்பொழுதெல்லாம் தகுதி பெற்ற ஒருவரை இப் பூவுலகிற்கு அவதரிக்கச் செய்து பிற சமயப் பிணக்குகளைப் போக்கி தமிழையும், சமயத்தையும், சிவபெருமான் காப்பாற்றி வருகிறார் என்பது சரித்திர சான்றுடைய உண்மையாகும்.

மற்ற சமயங்களின் கோட்பாட்டின்படி அவரவர் செய்த நல்வினை தீவினைகள், பாலபலன்களை அவரவர் அனுபவித்து வர வேண்டும் என்பதும் எவ்வித வழிபாடுகளாலும், பிரார்த்தனைகளாலும், பிராயச்சித்தங்களாலும், அவற்றைத் தவிர்க்கவோ குறைத்துக் கொள்ளவோ முடியவோ முடியாததும் ஆகும். ஆனால் திருஞானசம்பந்தர், ஆலய வழிபாடுகளாலும் பிரார்த்தனைகளாலும். பிராயச்சித்தங்களாலும் முன் ஜென்மங்களில் செய்த தீவினைகளையும், அவற்றால் ஏற்படும் துன்பங்களையும் இந்த ஜென்மத்தில் செய்த தீவினைகளையும் தவிர்த்துக் கொள்ள முடியுமென்ற உண்மையை நிரூபித்து நிலைநாட்டினர்,

இன்றைய பலன்

[20-5-68]

வைகாசி மீ 7 உ.

திங்கட்கிழமை

திதி - நவமி.

நட்சத்திரம் - சதயம். இரவு 8-15 மேல் பூரட்டாதி.

ராகுகாலம் - 7-23—8-53.

சுபநேரம் - 11-53—1-23.

இன்று பிறந்தவர்களுக்கு: கைகொடுத்து உதவுவதற்கு நண்பர்கள் வருவர். காரிய சித்தி உண்டு நீண்ட நாள் பகை சமரச முடிவுக்கு வரும். உடல் நலத்தைப் பேணி நடந்து கொள்ளவும். வீட்டில் உறவு முறைகள் மிகவும் சுமுகமாக இருக்கும். குடும்பத்தில் சுபகருமத்துக்கு இடமுண்டு. உங்கள் சூழ்நிலை உள்ளம் அனைவரையும் கவரும்.

மேஷம்: தூக்கம் கெடும் துன்பம் அணுகும்.
ரிஷபம்: அன்னையின் ஆணை, அமைதிக்கு வழி.
மிதுனம்: பாக்கிய விருத்தி, பரம்பொருள் சிந்தை.
கடகம்- கழுகுப்பார்வை கவலையின் தாக்குதல்.
சிம்மம்- இல்லறம் இனிக்கும், இணைப்பும் இறுகும்.
கன்னி- செய்தொழில் மந்தம், சிந்தையில் குழப்பம்.
துலாம்- இன்ப நாள் இது, இனிது வாழ்வீர்.
விருச்சிகம்- தொழில் பெருமை, தொல்லைகள் மறையும்.
தனுசு- அருளும் பொருளும் பண்புடன் சேரும்.
மகரம்- பொருள் விரயம், பொல்லாங்கு கேட்டல்.
கும்பம்- வாழ்க்கையில் புயல், வரவும் தடைப்படும்.
மீனம்- வார்த்தை ஜாலம் வசீகரப்பார்வை.

—ஜோதிடக்கலாநிதி— [illegible]

89 கடைகளுக்கு பாதுகாப்பு

நல்லூர், ஞாயிறு

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள தகரக்கடை றெடிமேட் பொருட்கள்விற்பனைக்கடை, மணிக்கடை ஆகியகடைகளின் வர்த்தகர்கள் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சி. ஐ. டி. பிரான்சிஸ், திரு. ஏ. சி. டயஸ் ஆகியோர் தலைமையில் இக்கடைகளின் பாதுகாப்புச் சம்பந்தமாகவும் பிற விஷயங்கள் சம்பந்தமாகவும் நடத்திய ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் சம்பந்தப்பட்ட 89 கடைகளின் பாதுகாப்புக்கென இரு காவலாளர்களை நியமிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கடைகள் அமைந்த இடத்தில் இரவு 9 மணி தொடக்கம் காலை 5 மணி வரையும் மணிக்கொரு தடவை மணியடிப்பதற்கென ஏற்பாடு செய்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக்கடைகளின் வர்த்தகர்களைக் கொண்ட புதிய சங்கத்தின் உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. டயஸ், தலைவர்: திரு. பி. ஜே. அலோஷியஸ், உபதலைவர்: ஜனாப் மிஸ்கின்சாகிப் ஹஜியார், காரியதரிசி: ஜனாப் எம். எஸ். சாகுல், உபகாரியதரிசி: திரு. கி. மு சண்முகராசா, தனாதிகாரி: திரு. எஸ். செல்லத்தம்பி, பணம் வசூலிக்கும் உறுப்பினர்: திரு. மு. சண்முகராஜா, திருவாளர்கள் எம். பீ. சின்னராசா, எஸ். சின்னப்பு, ஜனாப் இஸ்டீன்ஸ், ஜனாப் கரீம் ஆகியோரைக் கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

விவசாய அபிவிருத்திக்கு வழி

நமது நாட்டில் விவசாயத் துறையில் இன்னும் நல்ல முன்னேற்றமடைய விவசாயத்திலீடுபட்டிருப்பவர்களோடு அதில் ஈடுபடாதவர்களும் ஒத்துழைக்க வேண்டும்.

சிலரது அசிரத்தை வளர்ந்து வரும் உணவுப்பயிரைச்சேதமாக்கி விடவும் வழியமைத்து விடுவதுண்டு.

கட்டாக்காலி மாடுகள் விஷயத்தில் சிலரது கவனக் குறைவு சமயங்களில் செழித்து வரும் பயிர்பசையை நாசமாக்கி விடுவது இப்போது அதிகரித்துவரும் விஷயமாகிவிட்டது. இதில் இந்த கட்டாக்காலிமாடுகளின் சொந்தக்காரர் கட்டுப்பாட்டைமேற்கொள்ளாவிட்டால் உணவுப்பயிர்ச் செய்கையில் உழவன் எடுத்துவரும் ஊக்கமும் உழைப்பும்விழலுக்கிறைத்த நீராகிவிடும் இதனால் இறுதியில் பாதிக்கப்படுவர்கள் அப்பாவிப்பொதுமக்கள் தான் எங்கேனும் திரிந்துவரட்டும் என இந்தமாடுகளை எதேச்சையாகஅவிழ்த்து விடுவது எங்கோ கொண்டு போய் விடும் என்பதை இதன் சொந்தக்காரர்கள் எச்சரிக்கையோடு எண்ணிப் பார்க்க வேண்டும்.

விவசாயத்துறை மேலும் வளர விவசாயப்பகுதி காரியாலயங்களுக்குள் கடமை யாற்றும் உத்தியோகஸ்தர்கள் அந்த நாலு சுவருக்குள்ளும் அடைபட்டுக்கொண்டே இருப்பதுவே கடமையெனநினைத்துக் கொள்ளாமல் வயலில் வேலை செய்யும் விவசாயிக்கு தேவையானது எதுஎன்பதைக்கண்டறிந்து உதவசிறிது முன்வர வேண்டும். இது விஷயத்தில்நமது பார்லிமெண்ட் உறுப்பினர்கள் ஊக்கத்துடனும் விழிப்புடனும் இருப்பது நல்லவழி [illegible]அமைப்பதாக இருக்கும்.

வறண்ட நிலங்களை வளம்படுத்தி விளைச்சலை அதிகரிக்கவும் விவசாயத்துறையில் ஈடுபட்டுள்ள உத்தியோகஸ்தர்களும் மற்றவர்களும் முன்வரவேண்டும். சிறு குட்டைகள் குளங்களில் வறட்சிக்காலத்திலும் நீர்வற்றுதிருக்க அரசாங்கம் [illegible]ற்ற நடவடிக்கை எடு[illegible]ண்டும்.

இதுபற்றி 'வ[illegible]கள்' இம்மாதம் 1[illegible]திகதி 'ஈழநாடு' இதழில் [illegible]ப்பிட்டிருந்ததை ஆ[illegible]கின்றேன்.

—வயல்வாசி

கொழும்பு

'பாவனைப் பொருள் கட்டுப்பாட்டை உடனடியாக ரத்துசெய்க'

கிராமசபை பிரதமரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்' திங்கள்

யாழ்ப்பாணப் பகுதியில் கொண்டு வரப்பட்டுள்ள பாவனைப் பொருள் கட்டுப்பாட்டுத் திட்டத்தை உடனடியாக ரத்துச் செய்யும்படி அச்சுவேலி கிராமசபை பிரதமர் டட்லி சேனநாயக்காவிடம் கோரியுள்ளது.

அச்சுவேலி கிராம சபையின் மாதாந்தக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

அவசரகாலச் சட்டத்தின்கீழ் முக்கியமாக யாழ்ப்பாணப் பகுதியில் வசிக்கும் பொதுமக்களின் தனிமனித உரிமையைப் பாதிக்கும் வகையில், யாழ்ப்பாண மக்கள் பாவனைப் பொருட்களை குறிப்பிட்ட அளவிற்கு மேலதிகமாக ஒவ்வொருவருடைய இல்லங்களிலும் வைத்துப்பாவிக்க முடியாதென்று அரசாங்கம் நிறைவேற்றியிருக்கும் திட்டத்தை உடனடியாக ரத்துச் செய்து ஜனநாயகத்தை நாட்டில் நிலைநாட்டும்படி பிரதமரை இச்சபை கோருகிறது.

இக்கூட்டத்திற்கு திரு. சி. த. பொ. ரத்தினம் தலைமை வகித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிஸில்

அமெரிக்க - வட வியட்னும் பிரதிநிதிகள்

சுமார் 4மணி நேரம்பேசினர்

பேச்சு வார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் கிடையாது

பாரிஸ், மே 19

பாரிஸில் வட வியட்னும் பிரதிநிதிகளும் அமெரிக்கப் பிரதிநிதிகளும் நேற்றுச் சுமார் 4 மணி நேரமாகப் பேச்சுவார்த்தைகள் நடத்தினர். இதுவரை அவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளில், இதுவே நீண்ட நேரத்தை எடுத்துக்கொண்டது.

ஆனாலும், பேச்சுவார்த்தைகளில் எவ்வித முன்னேற்றமும் காணப்படவில்லை. இரு சாராரும், தத்தம் நிலைகளிலிருந்து சிறிதளவாவது விட்டுக்கொடுக்க முன்வந்ததாகத் தெரியவில்லை.

'குண்டு வீச்சை நிறுத்தவும்'

வட வியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. ஸுவான் நியு, வியட்னும் சமாதானத்துக்கு முதற்படியாக அமெரிக்க, வட வியட்னும் மீதான குண்டுவீச்சையும், மற்றும் போர் நடவடிக்கைகளையும் நிறுத்திக்கொள்ளவேண்டுமென மீண்டும் வலியுறுத்தினார்.

அமெரிக்கப் பிரதிநிதிகள் கோஷ்டித் தலைவர் திரு. அவரெல் ஹரிமன், அப்படி அமெரிக்கர் குண்டுவீச்சைத் தற்காலிகமாகவாவது நிறுத்தும் பட்சத்தில், எந்த வகையில் வட வியட்னும் ஆக்கபூர்வமான பதில் நடவடிக்கை எதையும் எடுக்கவிருக்கிறது என்பது பற்றி இதுவரை வட வியட்னுமிடமிருந்து திட்டவட்டமான பதில் எதுவும் கிடைக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினார்.

தென் வியட்னுமில் வட வியட்னும் தருப்புகள் இயங்குகின்றன என்பதை அனுமதிக்கும்படி வட வியட்னுமை அமெரிக்கா ஒப்புக் கொள்ளச் செய்வதற்கு எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. பேச்சுவார்த்தைகளில் ஒரு முக்கிய பிரச்னையாகிய இதனை, வட வியட்னும் தட்டிக் கழித்து வந்திருப்பதாகத் திரு. ஹரிமன் கூறினார்.

நிராகரிப்பு

வட வியட்னுமில் அமெரிக்கத் தரப்புகள் இழைத்ததாகவட வியட்னுமியர் குற்றஞ்சாட்டும் கொடூரங்கள் விசாரிக்கவும் அங்கு சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகள் அனுப்பவும் அனுமதிக்குமாறு அமெரிக்கா விடுத்த கோரிக்கையை வட வியட்னும் நிராகரித்துவிட்டது.

அமெரிக்க, வட வியட்னும் பிரதிநிதிகள், மீண்டும் அடுத்த புதன்கிழமை சந்திக்கவிருக்கின்றனர்.

பஸ் விபத்தில் 10 பேர் மரணம்

மணிப்பூர், மே 19

மணிப்பூரில் அரசாங்க பஸ் ஒன்று பள்ளத்தில் விழுந்ததன் விளைவாகப் பத்துப்பேர் உயிரிழந்தனர். மற்றும் 5 பேர், ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டனர்.

லாவோஸ்

சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்கள் 9 பேருக்கு தண்டனை

வியன்டியென், மே 19

லாவோஸ் விசேஷ நீதி மன்றமொன்று, 1965-ம் வருடத்தைய இராணுவச் சதிப்புரட்சியில் ஈடுபட்ட வர்கள் எனக் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஒன்பது பேருக்கு, 2 வருடம் தொடக்கம் 20 வருடம் வரை சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இந்தச் சதிப்புரட்சிக்குத் தலைமை தாங்கிய ஜெனரலின் வழக்கை நீதிமன்றம், லாவோஸ் சுப்ரீம் கோர்ட்டுக்குப் பாரப்படுத்தியது. இந்த ஜெனரல், தற்போது தாய்லாந்தில் இருக்கிறார்.

புனித சவேரியார் திருநாள்

ஊர்காவற்றுறை, திங்.

புங்குடுதீவு - பெருங்காடு புனித சவேரியார் ஆலய வருடாந்த திருநாள் இம்மாதம் 11-ந் திகதி ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவருகிறது.

ஐரோப்பிய நாடுகளிடையே அதிக ஒற்றுமை

பிரான்சும் ரூமேனியாவும் வலியுறுத்தியுள்ளன

புக்கா ரெஸ்ட், மே 19

ஐரோப்பிய நாடுகள், சுமுக நிர்ணயம், பரஸ்பர ஒத்துழைப்பு ஆகியவற்றின் அடிப்படையிலே தமக்கிடையே நட்புறவை வளர்த்துக் கொள்வது ஐரோப்பிய சர்வதேச நல்லுறவுக்கு வழி கோலுமெனப் பிரெஞ்சு ஜனாதிபதி டிகோலும், ரூமேனிய ஜனாதிபதி சிவுஷ்டொஸ்காவும் பிரெஞ்சு ஜனாதிபதியின் ரூமேனிய விஜயத்தின் முடிவில் வெளியிடப்பட்ட இணைப்பறிக்கையொன்றில் வலியுறுத்தியுள்ளனர்.

வருங்காலத்தில் ஐரோப்பிய ஒற்றுமையைப் பலப்படுத்துவதில் பிரான்சுக்கும் ரூமேனியாவுக்கும் இடையேயான நட்புறவு வளர்ச்சியடைவதும் ஒரு முக்கியமான அம்சமாக இருக்குமென இரு தலைவர்களும் ஒப்புக்கொண்டனர்.

வியட்னும்

வியட்னும்பற்றிக் குறிப்பிடுகையில் இப்போது அதிகு தொடர்ந்து நடைபெறும் சண்டையையிட்டு இருதலைவர்களும் கவலை தெரிவித்தனர். பாரிஸில் நடைபெறும் வியட்னும்சமாதானப் பேச்சுவார்த்தைகளை அவர்கள் வரவேற்றுள்ளனர்.

மேற்கு ஆசியா

மேற்கு ஆசியா பற்றிக் கூறுகையில் வெளியிடப்பட்ட அரபுப் பிராந்தியங்களிலிருந்து இஸ்ரேல் தனது துருப்புகளை வாபஸ் பெறவேண்டுமென இரு தலைவர்களும் வலியுறுத்தியுள்ளனர்.

பிரான்சுக்கு விஜயம்செய்யுமாறு தமக்கு விடுக்கப்பட்ட அழைப்பை ரூமேனிய ஜனாதிபதி ஏற்றுக்கொண்டுள்ளனர்.

செக்கோஸ்லாவாக்கியாவில் ரஷ்யப்பிரதமர் கொஸிஜின்

பிராக், மே 19

செக்கோஸ்லாவாக்கியாவுக்கு விஜயம் செய்துள்ள ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜின், அங்குள்ள மருத்துவ விடுதியொன்றில் சிறிது சுகவீனம் காரணமாக ஓய்வு எடுத்து வருகிறார்.

திரு. கொஸிஜின், செக்கோஸ்லாவாக்கியத் தலைவர்களுடன், ரஷ்யாவுக்கும் செக்கோஸ்லாவாக்கியாவுக்குமிடையேயான வரும்கால உறவுகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளார்.

செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய கொள்கைகளை ரஷ்யத் தலைவர்கள் இப்போது அதிக ஆவலுடன் வரவேற்பதாகப் பிராந்த பத்திரிகைகள் நம்பிக்கை தெரிவித்தன.

ஆனால், மாஸ்கோப் பத்திரிகைகள், செக்கோஸ்லாவாக்கியாவின் புதிய கொள்கைகளை நாளாந்தம் விமர்சித்த வருவதாக, மாஸ்கோவிலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் இந்திரா சிங்கப்பூர் புறப்பட்டார்

இரு வார தெ. கி. ஆசிய விஜயத்தின் முதற்கட்டம்

புதுடில்லி, மே 19

இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இன்று காலை சென்னையிலிருந்து, தமது இரண்டு வார தென்கிழக்காசிய விஜயத்தின் முதற் கட்டமாகச் சிங்கப்பூருக்கு விமான மூலம் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

சிங்கப்பூரில் இரண்டு நாட்கள் தங்கி விட்டு, அங்கிருந்து அவர் ஆஸ்திரேலியா, நியூஸீலாந்து, மலேஷியா ஆகிய நாடுகளுக்குச் செல்வார்.

சிங்கப்பூருக்குப் புறப்படமுன்னர், பத்திரிகையாளரிடம் பிரதமர் பேசுகையில் தாம் மேற்கொண்டுள்ள தென் கிழக்காசிய விஜயம், இப் பிராந்தியத்திலுள்ள நாடுகளிடையே அதிக அளவில் நட்புறவையும், ஒத்துழைப்பையும் வளர்ப்பதற்காகவே என்று வலியுறுத்தினார்.

ஆஸ்திரேலியாவும் நியூஸிலாந்தும் தம்மை ஆசிய நாடுகளாகவே வரவரக்கூடுவதாகக் குறிப்பிட்ட பிரதமர், அந்நாடுகளுடனான நட்புறவை இந்தியா வளர்த்துக் கொள்ளவேண்டியது அவசியம் என்றார்.

சிங்கப்பூரில் இறப்பான வரவேற்பு

மலாயாவிலிருந்து பிரிந்து சுதந்திர நாடாகத் தன்னை நிலைப்படுத்திய பின், இந்தியாவின் பிரதமர் ஒருவர் அங்கே விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும். இது காரணமாக, சிங்கப்பூர், திருமதி இந்திராவுக்கு மிகச் சிறப்பான வரவேற்பை அளிக்கக் காத்திருக்கிறது.

சிங்கப்பூரில் தங்கியிருக்கையில், திருமதி இந்திரா காந்தி, சிங்கப்பூர் பிரதமர் திரு. லீ குவான் இயூவுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவார்.

இத்தாலியில் பொதுத் தேர்தல்

ரோம், மே 19

இத்தாலியின் புதிய பார்லிமென்டைத் தேர்ந்தெடுக்கு முகமாக, இத்தாலி மக்கள் இன்று வாக்குப்பதிவு செய்துகொண்டுள்ளார்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளிலுள்ள வாக்காளர்களே இத்தாலிக்குக் கொண்டுவரு வதற்கென விசேஷ ரயில்கள் ஓட விடப்பட்டுள்ளன.

ஹோ-சி-மின் பிறந்த தினம் இந்தியத்தலைவர்கள் நல்லாசிகள்

புதுடில்லி, மே 19

வட வியட்னும் ஜனாதிபதி திரு. ஹோ-சி-மின் பிறந்த தினமாகிய இன்று, இந்திய ஜனாதிபதி டாக்டர் சாகிர் ஹுசெய்னும், பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் அவருக்குத் தமது நல்லாசிகளை அனுப்பியுள்ளனர்.

பிரெஞ்சு ஜனாதிபதி டி கோல் ரூமேனியாவிலிருந்து திரும்பினர்

ஒரு நாள் முன்னதாகவே

ரூமேனிய விஜயம் முடிவு

பிரான்ஸில் தொழிற்துறை அமைதியின்மையே காரணம்

பாரிஸ், மே 19

தமது ரூமேனிய விஜயத்தைப் பிரெஞ்சு ஜனாதிபதி டி கோல், ஒரு நாளி முன்னதாகவே முடித்துக்கொண்டு பாரிஸ் திரும்பியுள்ளார்.

பிரான்ஸில் ஏற்பட்டுள்ள தொழிற்துறை அமைதியின்மையும், மாணவர் கலவரங்களுமே அவர் இவ்வாறு விஜயத்தை இடையே நிறுத்திக்கொண்டு தாயகம் திரும்புவதற்குக் காரணங்களாகும்.

விமான நிலையத்தில் அவரைப் பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடுவும் மற்றும் மந்திரிகளும் சந்தித்தனர். அவர்களுடன் டி கோல் சில நிமிடங்கள் நாட்டு நிலைமைபற்றிப்பேசிய பிறகு எலிஸி மாளிகைக்குச் சென்றார்.

இதனிடையே, மாணவர் கலகக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையே சிறிது நேரம் மோதல்கள் நடைபெற்றன.

அரசாங்க அறிவிப்பு

முன்னதாக, அரசாங்க அறிக்கையொன்று நாட்டில் ஏற்பட்டுள்ள பரவலான வேலை நிறுத்தங்களிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுக்குமென அறிவித்திருந்தது.

பிரான்ஸ் வேலைநிறுத்தங்கள், அந்நாட்டின் ரயில், ரோட்டு விமானப் போக்குவரத்தைப் பாதித்துள்ளன. தபால் சேவைகளும் வேலை நிறுத்தங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன.

பொலிஸ் படையின் அதிருப்தி நிலவுகிறது

பொலிஸ் படையினரிடையேயும் அமைதியின்மை நிலவுவதாகக் கூறப்படுகிறது. கூடிய ஊதியம் வேண்டுமெனப் பொலிஸார் கோரிவருகின்றனராம்.

வேலைநிறுத்தம் செய்யும் தொழிலாளர்கள், சுமார் 100 தொழிற்சாலைகளைத் தமது வசமாக்கியுள்ளனர். முன்னதாக மாணவ ஆர்ப்பாட்டக்காரர், சென்ஸ் கட்டிட திறைமுற்றுகையிட்டபோது பொலிஸார் அதைச்சுற்றி வளைத்துப் பலத்த காவல் போட்டனர்.

வலதுசாரி மாணவர் ஆர்ப்பாட்டம்

நேற்று, இடதுசாரிகளுக்கெதிரான மாணவர்களின் ஆர்ப்பாட்டமொன்றும் நடைபெற்றது. அம்மாணவர்கள் கம்யூனிஸ்டுகளையும், நாட்டில் குழப்பம் விளைவிப்பவர்களையும் எதிர்க்கும் சுலோகங்கள் பொறிக்கப்பட்ட அட்டைகளைத் தாங்கியவண்ணம் ஊர்வலம் வந்தனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மன்னாரில் டின் மீன் தொழிற்சாலை

அமைச்சர் பிலிப் அத்திபாரக் கல் நாட்டினார்

கொழும்பு, ஞாயிறு

முதலாவது டின் மீன் தொழிற்சாலைக்கான அத்திபாரக்கல் இன்று நாட்டப்பட்டது. மன்னார், பேசாலையில் இந்தத் தொழிற்சாலைக்கான அத்திபாரக் கல்லை கைத் தொழில் மீன்பிடி அமைச்சர் திரு. பிலிப் குணவர்த்தனா நாட்டினார்.

பத்து லட்சம் ரூபாய் செலவில் உருவாக்கத் திட்டமிடப்பட்டிருக்கும் இந்த டின் மீன் தொழிற்சாலையின் வேலைகள் அடுத்த ஆண்டு முற்பகுதியில் முடிவடையுமென எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த டின்மீன் தொழிற்சாலை உருவாக்கப்பட்ட பின் வெளி நாட்டிலிருந்து இறக்குமதியாக்கப்படும் தொகையைக் குறைத்து உள்ளூர் தேவைகளை ஓரளவு பூர்த்தியாக்கலாம் என அமைச்சு கருதுகிறது.

வடமாகாணம் பற்றி ஆர். ஜி. அக்கறை?

கொழும்பு, ஞாயிறு

வட மாகாணத்திலுள்ள மாநகரசபைகளுக்குத் தனித்தனியே உள்ளூராட்சி அமைச்சும், திணைக்களமும் வழங்கியுள்ள விசேஷ உதவிப் பணமும், சாதாரண உதவிப்பணமும் எவ்வளவு என தம்பதேனியா எம். பி திரு. ஆர். ஜி. சேனநாயகா உள்ளூராட்சி உதவி அமைச்சரிடமும் தகவல், ஒலிபரப்பு உதவி அமைச்சரிடமும் கேட்கவிருக்கிறார்.

அடுத்தமாதம் 5-ம் திகதி பார்லிமெண்டில் தாம் கேட்கவிருக்கும் இக்கேள்விக்கான முன்னறிவித்தலை அவர் கொடுத்துள்ளார்.

திரு. சேனநாயகா இது சம்பந்தமாகக் கேட்கவிருக்கும் மற்ற கேள்விகள் வருமாறு:

வட மாகாணத்திலுள்ள மாநகரசபை, நகரசபை, பட்டினசபை, கிராமசபை ஆகியவற்றின் எண்ணிக்கை எவ்வளவு?

ஒவ்வொரு சபையினதும் வாக்காளர் எண்ணிக்கை எவ்வளவு?

கிராமசபைகளுக்கு உணவு உற்பத்திக்காக அல்லது கமத்தொழிலுக்காக உதவிப்பணம் அல்லது கடன் தொகை அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளதா? அப்படியாயின் எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது?

அவமதித்தாராம் கோர்ட்டை

குரும்பசிட்டி, ஞாயிறு

நீதி மன்றத்தின் உள்ளே மது போதையில் குழப்பம் விளைவித்து கோர்ட்டு சார்ஜண்டை அவதூறான வார்த்தைகள் பேசி அவமதித்ததாக ஒருவர் றிமாண்டில் வைக்கப்பட்டார். இச் சம்பவம் மல்லாகம் நீதி மன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மயிலிட்டியைச் சேர்ந்த கே. கந்தசாமி என்ற நபரே கைதானவராவர். வழக்கொன்றின் எதிரியைப் பிணை எடுக்க வந்தபோது இந்நபர் இவ்விதம் நடந்து கொண்டாராம். கோர்ட் சார்ஜண்ட் எஸ். ரவீந்திர ராஜா மாஜிஸ்திரேட் முன்னிலையில் கைது செய்த நபரை ஆஜர் செய்து உடனேயே வழக்குத் தாக்கல் செய்தார்.

நீதிபதி முன் சிங்கோ ஆஜர்

கொழும்பு, ஞாயிறு

கல்முனையில் கொலை செய்யப்பட்ட பொலிஸ் கான்ஸ்டபிள் ஐயாத்துரையின் கொலை சம்பந்தமாகக் கைது செய்யப்பட்ட பீட்டர் சிங்கோ என்பவர் கல்முனை மாஜிஸ்திரேட் முன் இன்று ஆஜர் செய்யப்பட்டார் இம்மாதம் 20-ம் திகதிவரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

ஆணும் பெண்ணும் கைது

மதுபானத்துடன்

கொழும்பு, ஞாயிறு

சுமார் 15,000 ரூபாய் பெறுமதியான 200 போத்தல் வெளிநாட்டு மதுபானங்கள் கொண்ட சூட்கேஸ் ஒன்றுடன் வாடகைக் கார் ஒன்றிலிருந்து கோட்டை ரயில்நிலையத்தின்முன் இறங்கிய ஓர் ஆணையும் பெண்ணையும் சுங்கத் தடுப்பு அதிகாரிகளான திரு. ஆர். எஸ். பி. மூர்த்தியும், திரு. வீரசுந்தரமும் பொலிசாரின் உதவியுடன் கைதுசெய்தனர்.

ஆலய புனருத்தாரணம்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை - சரவணை ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி ஆலயம் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயத்தின் புனருத்தாரண மகா கும்பாபிஷேகம் அண்மையில் நடைபெறவிருக்கிறது. இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன கும்பாபிஷேகத்தையடுத்து ஆலயத்தின் வருடாந்த உற்சவம் நடைபெறவிருக்கிறது.

நடுக்கட்டல்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

வல்வை பட்டினசபை எல்லைக்குள் நீண்டகாலமாக வரிகளைச் செலுத்தாமலிருந்துவரும் வரியிறுப்பாளர்களின் வீடுகளிலுள்ள பொருட்களை இம்மாதம் 20-ந் திகதி தொடக்கம் பட்டினசபை உத்தியோகத்தர்கள் பொலிசாரின் உதவியுடன் சென்று நடுக்கல் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நேர்முகப் பரீட்சை

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கான விசேஷ பிரிவுகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கு 52 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 4 அல்லது 5 பேர் மட்டுமே வர்த்தகப்பகுதிக்குத் தெரிவு செய்யப்பட்டனர் எனவும் இவ்வாண்டு 10 மேர் தெரிவு செய்யப்பட விருப்பதாகவும் தெரியவருகிறது.

குடத்தனை கி. ச. தேர்தல்முடிவுகள்

யாழ்ப்பாணம், திங்கள்

குடத்தனை சிராமசபைக்கான தேர்தல் நேற்று முன்தினம் நடைபெற்றது.

11 வட்டாரங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:-

1-ம் வட்டாரம்: துரையப்பா வல்லிபுரம் [111], வி. தணிகாசலம் [88].

2-ம் வட்டாரம்: மு. மாணிக்கம் [46], வே. இராசையா [44].

3-ம் வட்டாரம்: யா. சி. மியோன்பிள்ளை [71], நீ. யோ. மரிசாம்பிள்ளை [60].

4-ம் வட்டாரம்: பெரிய தம்பி முத்துக்குமாரு [77], வைரவப்பிள்ளை வேலுப்பிள்ளை [61].

5-ம் வட்டாரம்: கணபதி சின்னவன் [30], கே. வேலுப்பிள்ளை [28], வேலுப்பிள்ளை வினாசித்தம்பி [25].

6-ம் வட்டாரம்: வி. பொன்னையா [50], சி. ஆழ்வாப்பிள்ளை [48].

8-ம் வட்டாரம்: தி. சந்திரசேகரம் [போட்டியின்றி தெரிவு].

9-ம் வட்டாரம்: நாகமுத்து தியாகராஜா [78], நாகமுத்து பொன்னையா [50], க. சிவப்பிரகாசம் (15).

10-ம் வட்டாரம்: சிவசாமி கந்தர் கணபதிப்பிள்ளை [136], விஜயரத்தினம் வைரவப்பிள்ளை [94], முருகேசு ஆழ்வார் [02].

11-ம் வட்டாரம்: க. கந்தையா [55], குலதிலகபிள்ளை செல்லையா [41].

7-ம் வட்டாரத்துக்கான போட்டி முடிவுகள் தாளைய ஈழநாட்டில் வெளிவரும்.

[கா. நி.]

நெசவு ஆசிரியர் சங்கக் கூட்டம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

நெசவு ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டம், அதன் தலைவர் திரு. கே. சண்முகநாதன் தலைமையில் யாழ். பெருமாள் கோவிலடியில் நடைபெற்றது. குடிசைக் கைத்தொழில் அதிசர் திரு. எஸ் கந்தவனம் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் பின்வருவோர் புது வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். சுப்பிரமணியம், காரியதரிசி: எஸ். செல்லையா, தனாதிகாரி: கே. சுப்பிரமணியம் மற்றும் 7 பேர்கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

பஸ்பிரயாணிகள் கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

தீவுப்பகுதியில் பஸ்சேவையை திருப்திகரமாக நடாத்துவதற்குதீவுப்பகுதியில்பஸ்டிப்போ ஒன்றைத் திறக்க வேண்டுமென தீவுப்பகுதி பஸ் பிரயாணிகள் சங்கம் இ. போ. ச. வடமாநில முகாமையாளரைக் கேட்டுள்ளது.

சேவையில் இருக்கும் பஸ் வண்டிகள் பழுதானமை காரணமாகத் திருத்துவதில் காலதாமதம் ஏற்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆசிரியர்சங்கவருடாந்த கூட்டம்

புன்னாலைக்கட்டுவன் ஞாயிறு

வலிகாமம்கிழக்கு ஆசிரியர் சங்க வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 23-ம்தேதி வியாழன் பிற்பகல் 4-30 மணியளவில் உரும்பராய் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

இக் கூட்டத்தில் பல முக்கியதீர்மானங்கள் விவாதிக்கப்பட விருப்பதாகத் தெரிகிறது.

டாக்டர் விடுதிக்குள் குழப்பம் செய்தாராம்

யாழ்ப்பாணம், திங்கள்

மதுபோதையில் டாக்டர்கள் விடுதிக்குள் புகுந்து கலாட்டா செய்தாராம் ஒருவர். உடனடியாக ஸ்தலத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் அவரைக் கைது செய்தனர்.

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி மேல் மாடியிலுள்ள டாக்டர்கள் விடுதியிலேயே இச் சம்பவம் நேற்று முன்தினம் காலையில் நடைபெற்றதாகப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள 14ம் வார்ட்டில் நோயாளியாக இருக்கும் ஒருவரே இப்படி நடந்து கொண்டாராம்.

இவர் இப்போது பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

வார்ட்டிலிருந்த இந்த நோயாளிக்கு எவ்வாறு மதுபானம் கிடைத்ததென்பது பற்றி ஆஸ்பத்திரி அதிகாரிகள் விசாரணை செய்துவருகின்றனர் எனவும் தெரியவருகிறது.

[கா. நி.]

நிரந்தர நேரசூசி இல்லை

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

கோப்பாய் வட்டாரத்திலுள்ள பலபாடசாலைகளில் இன்னும் நிரந்தரநேரசூசி தயாரிக்கப்படவில்லை. காரணம், சிலபாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்பட்டபின்னர் அவர்களின் இடங்கள் நிரப்பப்படாமையேயாகும். இதன் விளைவாகப் பலஆசிரியர்களுக்கு ஓய்வுப் பாடநேரம் நேரசூசியில் ஒதுக்கப்படவில்லையெனத் தெரிகிறது.

வணக்க மாத திருநாள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

தும்பளை தேவமாதா கோயில் வணக்கமாதத் திருநாள் முடிவடைவதை யொட்டி இம்மாதம் 26ந் திகதி திருச்சுரூபச் சுற்றுப் பிரகாரமும் அடுத்த மாதம் 2ந் தேதி சற்பிரசாத சுற்றுப்பிரகாரமும் பங்குக்குரவர் வண. பிதா தேவராஜன் அவர்களால் நடத்தி வைக்கப்படும்.

இதுவரை கவனிக்கப்படவில்லை

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணைக் கிராமத்திலுள்ள ஈணியக்கை, குருக்கள் கேணி வாய்க்கால் பழுடைந்து இருப்பதால் சரவணைச் சேரிப்பகுதி மக்கள் மழை காலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப் படத்தக்கநிலை ஏற்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் சரவணைசின்னமடு சேரிப்பகுதிமக்கள் வீடுகளை இழந்து ஆலயத்தில் குடியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது

இதுபற்றி சரவணையபிர்ச் செய்கைக்குழு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்தும் இதுரை கவனிக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

திருப்பணி வேலையில் திருப்தி

காரைநகர், ஞாயிறு

காரைநகர் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவது குறித்து ஆசிரியர் எம். ஏ. கந்தையா பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

"இலட்சக்கணக்கான ரூபா செலவிடப்பட்டு திருப்பணி வேலைகள் நடைபெற்றுவரும் இவ்வேளையில் திருப்பணிச்சபை மக்கள் மத்தியில் எதுவித அதிருப்தியும் எழாவண்ணம் சிறப்பாக இயக்கி வருதல்பாராட்டுக்குரியதாகும்" என அவர் தெரிவித்துள்ளார்.

அத்திவார வேலை அடுத்த மாதம் ஆறும் திகதி நடைபெறவிருக்கிறது.

விசாரணையின் பின் விடுதலை

நல்லூர், ஞாயிறு

ஐந்துமாதச் சிசு ஒன்று சாக்கினுள் கட்டப்பட்டு இறந்தநிலையில் நவாலியில் உள்ள வயல் கிணறொன்றில் இருந்து ஆனைக்கோட்டைப் பொலிசாரால் கண்டுபிடிக்கப்பட்டது சம்பந்தமாக விசாரணை நடாத்திய ஆனைக்கோட்டைப் பொலிஸ் சார்ஜண்ட் சின்னத்தம்பி நாவலியைச் சேர்ந்த ஒரு கைம்பெண்ணைக் கைது செய்து வைத்திய பரிசோதனை செய்தபின்னர் விடுதலை செய்தார். இது சம்பந்தமாகப் பாடசாலை மாணவி ஒருவரையும் சந்தேகத்தின்மீது பொலிசார் தேடிவருகின்றனராம்.

"சூரியன் மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

சந்தன வில்லைகள்

கோவில் தேவைகளுக்கும் திருமணம் முதலிய வைபவங்களுக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிரதர்ஸ்

73. மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சி. டபிளியூ. ஈ.

துணி வகைகள்

	கூப்பனுக்கு	கூப்பன் இல்லாமல்
சீத்தைகள்	ரூ.1.55-2.10 வரை.	ரூ 2 80-3 35வரை.
பொப்ளின்	1.90-2.00 ,,	3.15-3 25 ,,
டெக்கரன்-36''	2.70	3 95
சட்டின்	2.79	4.04
கிரேப் சில்க்	2.65	3.90

டயறப்ஸ்

54—60, பெரியதெரு, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வி விளம்பரம்

பின்வருகின்ற வேலைகளுக்கு நாரந்தனை, இராமசபைத் தலைவரால் 1968-ம் ஆண்டு வைகாசி மாதம் 28-ம் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணி வரையும் ஸ்தலவிதானபகுதியாரால் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து சீல்வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் 27-5-68-ந் திகதிவரை இச் சபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப்பத்திரக் கட்டுப்பணம் ரூபா 25/-ம் கேள்விப்பத்திரக் கிரயப்பணம் ரூபா 5/-ம் செலுத்தவேண்டும். கிரயப்பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது. மேலதிக விபரங்களைக் இராமசபை அலுவலகத்திலும், யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் அறிந்துகொள்ளலாம்.

1. பெரியபுலம் ஒழுங்கை வேலி.
2. புளியங்கூடல் விளையாட்டு மைதானத்தைச் சுற்றி வேலி.
3. வெள்ளநிவாரண வேலைகள்.

(i) ஊரெண்டி ஒழுங்கை வேலி.
(ii) தான்தோன்றி அம்மன் கோவில் ஒழுங்கை வேலி.
(iii) கணவாய்க்குள ஒழுங்கை வேலி.

ச. அருமைநாதன்
தலைவர்
இராமசபை, நாரந்தனை.

இராமசபை அலுவலகம்,
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.
17-5-68. 681

MANOHARA
JAFFNA
Daily at
4-45, 7-00, &9-45 P. M.
Audie Murphy, Joan Staley
in
GUN POINT
(Color)

கடைசி வாரம்!
ரா ணி
(யாழ்ப்பாணம்)
எம். ஜி. ஆர். - விஜயா
நடித்த
விவசாயி

தேநீர்க் கடை கமிஷனுக்கு

நாவாந்துறை வடக்கில் இருக்கும் தேநீர்க்கடை சகலதளபாடங்களுடன் கமிஷனுக்கு கொடுக்கப்படும். விபரங்களுக்கு நேரில் சந்திக்கவும்.

கா. ந. இளையதம்பி
284 K. K. S. வீதி
672 யாழ்ப்பாணம்

நாரந்தனைக் இராமசபைக்கு சித்த ஆயுள்வேத வைத்தியர் தேவை

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தங்கள் விண்ணப்பங்களை 27-5-68ந் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக தலைவர், இராமசபை, நாரந்தனை, ஊர்காவற்றுறை என்ற விலாசத்துக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும்.

1. வேதனம் வருடம் ரூபா 600/-ம், வாழ்க்கைப்படிகளும்.
2. வயது 25க்கும் 40க்கும் உட்பட.
3. தகைமைகள்: இலங்கை உள்நாட்டு மருத்துவக் கல்லூரியின் உள்நாட்டு மருத்துவ, சத்திரசிகிச்சை டிப்ளோமாப்பட்டம் அல்லது இந்தியாவிலாகுதல் இலங்கையினாகுதல் அங்கீகரிக்கப்பட்ட ஆயுள்வேத வைத்தியராக 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்கவேண்டும் அல்லது பொது ஆயுள்வேத வைத்தியராக 10 வருடங்களுக்கு குறையாத அனுபவம் பெற்றிருக்கவேண்டும்.

ச. அருமைநாதன்
தலைவர்
இராமசபை, நாரந்தனை.

இராமசபை அலுவலகம்,
நாரந்தனை,
ஊர்காவற்றுறை.
17-5-68. 679

4-வது வாரம்
ரா ஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜிகணேசன்
நடிக்கும்
மனோகரா

தேவை

ஒதியமலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
நெடுங்கேணி

மேற்படி சங்க மனேச்சர் பதவிக்கு 26-5-68 வரையும் விண்ணப்பம் காரியதரிசியால் ஏற்றுக்கொள்ளப்படும்.

தகைமை

பொதுத்தராதரப் பரீட்சையிலும் கூட்டுறவுக்கலாசாலைப் பரீட்சையிலும் சித்தியடைந்தவராயும் வயது 21—35க்குமுள்ளவராயுமிருத்தல் வேண்டும். பிணை: காசு ரூபா 1500/-, உறுதி — ரூபா 4000/-, மாதச்சம்பளம் ரூபா 150/-

ச. இளையதம்பி
காரியதரிசி

ஒதியமலை
நெடுங்கேணி. 680

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் நெற்குத்தும் ஆலை நெற்குத்தும் ஆலை கூலி ஒப்பந்தம்

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்தின் நெற்குத்தும் ஆலையில் நெற்குத்தும் ஆலை தொடர்பான கூலிஒப்பந்தம் செய்வதற்கு கேள்விப் பத்திரங்கள் வரவழைக்கப்படுகின்றன. மேற்படி பத்திரங்களை அலுவலக நேரங்களில் சமாசத்திடம் ரூபா 50-00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். ஒப்பந்தத்திற்குத் தெரிவுசெய்யப்படும் ஒப்பந்தக்காரர் பிணையாக ரொக்கம் ரூபா 1000-00 ஆகவும் பிணை ரூபா 4000-00 செலுத்த வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் முடிவு திகதி 23-5-68 பகல் 12 மணி.

678 காரியதரிசி

அடிஸ் அபாபா மே 19
எத்தியோப்பாவில் பெய்த பேய்மழையினால் ஆயிரக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் வீடுகள் வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

REGAL JAFFNA
Daily at 10-30 A. M.
4-45, 7-00 & 9-45 P. M.
Burt Lancaster &
Paul Scofield
in
THE TRAIN

உதைபந்தாட்ட தரம் உயர்த்த முயற்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணத்தில் உதைபந்தாட்டத்தின் தரத்தை உயர்த்துவதற்கும், வெளிநாட்டுக் கோஷ்டிகளை இங்கு வரவழைத்து சிநேகபூர்வமான பெரும் உதைபந்தாட்டப் போட்டிகளை நடத்துவதற்கும் வெகுவிரைவில் ஒரு யாழ். மாவட்ட உதைபந்தாட்டச் சங்கம் உருவாக இருக்கிறது.

[வி. நி.]

ஆர். சி. பாடசாலை சம்பியனானது

ஊர்காவற்றுறை, ஞாயிறு புங்குடுதீவு 'நசரேத்' சன சமூக நிலையத்தினரால் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் புங்குடுதீவு ஆர். சி. பாடசாலைக் கோஷ்டி சம்பியனானது. மோதல் வெற்றிகண்ணதி நிர்காக நடைபெற்ற இப் போட்டியில் புங்குதீவில் உள்ள பல விளையாட்டுக் கழகங்கள் கலந்துகொண்டன.

லண்டன் பரீட்சையிற் சித்தி

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

திருநெல்வேலி வர்த்தகக் கல்லூரி இயக்குநர் திரு: எம். புவனேந்திரன் லண்டன் கணக்கியல் விசேஷப் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்.

இவ்வாண்டு இப்பரீட்சையில் சித்தியடைந்த மூன்று

வரி விளம்பரம்

விற்பனைக்கு

முல்லைத்தீவு பஜாரிலுள்ள இரண்டு கடைகளும், அத்துடன் 6 ஏக்கர் வயற்காணியும் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு:— க. வேலுப்பிள்ளை, ரெம்பிள் ரோட், முல்லைத்தீவு. 1496

உற்சவம்

யாழ்ப்பாணம், திருநெல்வேலி இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில் உற்சவம் நாளை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்ற சிறப்புடன் ஆரம்பமாகிறது. இம் மாதம் 30, 31ம் திகதிகளில் தேர், தீர்த்த உற்சவமும் அடுத்த மாதம் முதலாம் திகதி பூங்காவனமும் நடைபெறவிருக்கின்றது.

நாளை இரவு நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர் சுவாமிநாத தம்பிரான் சுவாமிகளின் "முருகனும் முதாட்டியும்" என்ற தலைப்பு பிரசங்கம் இடம்பெறும்.

மாண்டவர் தொகை: 75

வாஷிங்டன் மே 19
மத்திய அமெரிக்காவில் ஏற்பட்ட பயங்கரச் சூறாவளிக்கு பலியானவர் தொகை 75 பேர் என இப்போது அறிவிக்கப்பட்டுள்ளது. 11 அமெரிக்க நாகரிகள் இந்தச் சூறாவளியினால் பாதிக்கப்பட்டனர்.

இலங்கையருள் இருவர் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1967ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க இந்திய—இலங்கை ஒப்பந்தச்(செயற்படுத்தல்) சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரசையாகும் நிலைமையை அளிப்பதற்கான விண்ணப்பங்கள்

பதிவுசெய்தல் மூலம் இலங்கைப் பிரசையாகும் நிலைமையை அளிப்பதற்கான விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டிய காலம் 1968—5—1 ஆந் திகதியிலிருந்து 1970—4—30 ஆந் திகதி வரையுமாகுமென கௌரவ அமைச்சர், மேற்குறிப்பிட்ட சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ், வெளிப்படுத்தியுள்ளார்.

2. இலங்கைப் பிரசையாக அல்லது இந்தியப் பிரசையாகக் கணிக்கப்படாத இலங்கையிலுள்ள இந்திய வம்சாவழியினர், 1964 ஒக்ரோபர் 30ஆந் திகதி காலத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கைப் பிரசா உரிமையைப் பெறுவதற்கு விண்ணப்பிக்க விரும்பினால் அவர்கள், தமது விண்ணப்பங்களை 1970 ஏப்பிரல் 30 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ ஆணையாளருக்கு வந்து கிடைக்கக்கூடிய தரம் சமர்ப்பிக்கலாம்.

3. 21 வயதிற்கு மேற்பட்ட எந்த ஆளும் தனி விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பிக்கவேண்டும்; இன்னொருவருடைய விண்ணப்பத்தில் அவரைச் சேர்க்கக்கூடாது. விண்ணப்பதாரி தனது மனைவியையும் 21 வயதுக்குட்பட்ட பிள்ளைகளையும் தனது விண்ணப்பத்தில்சேர்க்கலாம்.

4. இச் சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரசா உரிமை வழங்குகையில், விண்ணப்பதாரி ஒருவர் 1949 ஆம் ஆண்டின் இந்திய பாகிஸ்தான வாசிகள் [பிரசா உரிமைச்] சட்டத்தின்கீழ் இலங்கைப் பிரசாஉரிமைக்கு ஏற்கனவே விண்ணப்பித்துள்ளாரா என்பதையும் [அல்லது அவரி பெயர் ஒரு விண்ணப்பத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதையும் இலங்கையில் அவரது பிறப்பு, வசிப்பு ஆகியவற்றையும் அவரது குடும்பத்தில் எவரவது ஏற்கனவே ஒரு இலங்கைப் பிரசையாகியுள்ளாரா என்பதையும் கௌரவ அமைச்சர் அவர்கள் கருத்தில் கொள்வார்.

5. விதித்தபடிவங்களில் பிரசாஉரிமைக்கான விண்ணப்பங்கள் செய்யப்படவேண்டும். இப்படிவங்கள் பின்வரும் இடங்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்:-

[i] கோல்பக், கொழும்பு 1இல் உள்ள இந்தியவம்சாவழியினரைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளரின் அலுவலகம்.

[ii] உப்சேரிகளும் பெரும்பாக இறைவரி உத்தியோகத்தரின் அலுவலகங்களும்.

[iii] தோட்ட அலுவலகங்கள்.

6. விண்ணப்பங்கள் கிழ்க்காட்டப்பட்டவருக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அவரிடம் ஒப்படைக்கப்படவேண்டும்:— இந்திய வம்சாவழியினரைப் பதிவுசெய்வதற்கான ஆணையாளர், கோல் பக், கொழும்பு.

"பிரசா உரிமைக்கு விண்ணப்பம்" என்ற சொற்கள் கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

வி. நி. ஐயசிங்க,
இந்திய வம்சாவழியினரைப் பதிவு செய்வதற்கான ஆணையாளர்.

கொழும்பு 1, 1968, ஏப்பிரல் 20 ஆம் திகதி.
GP.5657

சென்னையில் 100 நாட்களுக்கு ஓடிய நிறைந்த வள்ளுவ காவியம்!

கெப்பிட்டல்
(கொழும்பு)
2-00, 6-00, 9-30

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-30

'அன்பிலார் எலாம் தமக்குரியர் அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'

இதற்கு நீங்கள் சொல்லப்போகும் பதில்

மக்கள் திலகம்
எம். ஜி.
ராமச்சந்திரன்

சரோஜாதேவி

எம். ஆர். ராதா

சௌகார் ஜானகி

பேபி ஷகிலா

தங்கவேலு

நடித்த

ஸ்ரீ முத்துக்குமரன்
பிக்சர்ஸ்
அளிக்கும்

பெற்றால்தான் பிள்ளையா?

டைரக்ஷன்: திருமலை மகாலிங்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், திங்கள்

அண்மையில் வியாபாரி மூலை கலைமணி வாசிகசாலை விக்னேஸ்வரா படிப்பகங்களின் நிர்வாகசபைக் கூட்டம்வரதர் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றபோது புது வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: சோமாஸ்கந்தர், உபதலைவர்: கா. இராமச்சந்திரன், இணைச்செயலாளர்கள்: ஆ. க. நடராசா, த. குமாரசிங்கம். பொருளாளர்: கா. சி. விஸ்வநாதன், துணைப்பொருளாளர் வீரராசசிங்கம். 9 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மட்டுவில்

சாவகச்சேரி, ஞாயிறு

மட்டுவில்தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம்நடைபெற்றபோது புதியநிர்வாகிகள் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்- பொ. கந்தையா. உபதலைவர்- பொ. பத்மநாதன். காரியதரிசி- வே. மயில்வாகனம். உபகாரியதரிசி ச. இங்கரசா. தனாதிகாரி- நா. கனகரத்தினம். உபதனாதிகாரி- மா. சுப்பையா. நிர்வாகிகள்- த. சின்னத்தம்பி, வி. சிவசம்பு.

மாதகல்

பண்டத்தரிப்பு, திங்கள்

மாதகல்நாவலர்சனசமூக நிலையநிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- திரு. து. முருகேசு. செயலாளர்-திரு. வ. தில்லைநாதன். தனாதிகாரி- திரு. மா. இராசேந்திரம். விளையாட்டுத்தலைவர்- வி. சுப்பிரமணியம் நிலையத்தலைவர்- வீ. கந்தசாமி. புத்தக அதிபர்- அ. கணேசலிங்கம். உபதலைவர் வி. சிற்றம்பலம். பதின்மூன்று பேரடங்கிய நிர்வாக சபை ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.

மண்டைதீவு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

மண்டைதீவு உதயசூரியன் சன சமூக நிலைய வருடாந்த பொதுக்கூட்டம் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. சோ. சண்முகரத்தினம், உபதலைவர்: திரு. க. விஸ்வரத்தினம், செயலாளர்: திரு. கு. க. நடராசா, உபசெயலாளர்: திரு. வி. மாணிக்கவாசகர், பொருளாளர்: திரு. செ. தருமராசா.

புங்குடுதீவு

ஊர்காவற்றுறை, ஞாயிறு

புங்குடுதீவு - விக்கினேஸ்வர விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகிகள் தேர்தல் கூட்டம் சமீபத்தில் நடைபெற்றது.

பின்வருபவர்கள் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

பாதுகாவலர்: திரு. க. சுப்பிரமணியம், தலைவர்: திரு. க. தியாகராசா, உபதலைவர்: திரு. ஆ. கணேசமூர்த்தி. காரியதரிசி: திரு. த. இளங்கோவன், உபகாரியதரிசி: திரு. மு. ஆனந்தலிங்கம், தனாதிகாரி: திரு. த. பாலசுப்பிரமணியம்.

உடுப்பிட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

உடுப்பிட்டி வடக்கில் விவசாயச் சங்கம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது. புது வருட நிர்வாகிகளாகப்பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் ஆர். ஜெயகுணரத்தினம், காரியதரிசி: எஸ். நாகராசா, தனாதிகாரி: கே. தங்கவேலாயுதம் ஐந்து பேர் கொண்ட நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

கொக்குவில்

சங்கானை, ஞாயிறு

கொக்குவில் மனோன்மணி இளைஞர் சனசமூகநிலைய நடப்புவருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்திரு. க. நடராசா, உபதலைவர் திரு. த. இராசரத்தினம், காரியதரிசி: ஆ. க. பத்குணராசா. உபகாரியதரிசி: வே. பரராசசிங்கம், தனாதிகாரி- ந ஜெயகுமார், உபதனாதிகாரி: வே. பரராசசிங்கம், தனாதிகாரி: ந. ஜெயகுமார், வே, மகேந்திரன். பொறுப்பாளர், கு. ஆனந்த நடராசா, உபபொறுப்பாளர்: சி. குகதாசன். நிர்வாகசபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

பண்ணைத்தரிப்பு

சங்கானை, ஞாயிறு

பண்டைத்தரிப்பு வை. எம். சி. ஏ. வருடாந்த நிர்வாகிகள் தெரிவுக்கூட்டம் மேற்படி மண்டபத்தில் போஷகர்: வண. எஸ். பி. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக 3 வருட காலத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். ஜிற்றேந்திரன், உபதலைவர் கே. எம். போல், காரியதரிசி: பீ. ராஜேந்திரகுமார், தனாதிகாரி: எஸ். ச. தேவநாயகம், நூல்நிலையப் பொறுப்பதிகாரி: எஸ். பாரதிநாதன், விளையாட்டுக்காரியதரிசி: கே. நவரத்தினசிங்கம், நாடகக்காரியதரிசி: ஏ எம். ஜேம்ஸ் 11பேர் கொண்ட ஒரு இயக்குனர் சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

—

சொந்த வீட்டில் திருடினாராம்

அளவெட்டி, ஞாயிறு

தமது வீட்டிலிருந்தபணத்தைக்களவாடிஷேட்டும்காற்சட்டையும் வாங்கிய சிறுவனை காங்கேசன்துறைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் கைது செய்தனர்.

ஆவரங்காலைச் சேர்ந்த புத்தகலட்டி வாசியான சின்னத்தம்பி செல்வராசா [வயது 12] என்னும்சிறுவன் தமது வீட்டிலிருந்த ஆயிரம் ரூபாய் வரையிலுள்ள பணத்தையாருக்கும் தெரியாது எடுத்துச்சென்று சேர்ட், காற்சட்டை முதலிய உடுப்புக்களை வாங்கி செலவுசெய்து காங்கேசன் துறை வீதியால் சென்று கொண்டிருக்கையில் காங்கேசன்துறை பொலிஸ் பகுதிரைச்சேர்ந்த திரு. வி. செல்லையா, ஆர். நடராசா ஆகியோர் சந்தேகத்தின் மீது கைது செய்து இச்சிறுவனை சோதனையிட்டபோது 713ரூபா 5சதம் இவரிடம் காணப்பட்டதாகவும் மிகுதிப்பணம் செலவு செய்துள்ளதாக இவர் தெரிவித்ததாகவும் தெரியவந்தது.

இச்சிறுவனை விசாரணை செய்த மேற்படி பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்வதற்காக இச்சிறுவனை கோப்பாய் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

துப்பாக்கிச்சூடு ஒருவர் ஆஸ்பத்திரியில்

யாழ்ப்பாணம், திங்கள்

சங்கானையில் நடைபெற்ற துப்பாக்கிச்சூடு காரணமாக கே. மகாலிங்கம் என்ற ஒருவர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சின்னட்டியன் கணபதி அடுத்த மாதம் 3-ம் திகதிவரை றியாண்டில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளார். தலைமறைவாக இருப்பதாகக் கருதப்படும் சந்தேக நபர்களான கணபதி ராஜரத்தினம், கணபதி ராஜேந்திரா ஆறுமுகம் தேவராசாமுதலியோரை கைதுசெய்ய சங்கானைப்பொலிசார் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். [கா. நி.—சங். நி]

—

இறந்து கிடந்தார்

நல்லூர், ஞாயிறு

சண்டிலிப்பாய் தபால் கந்தோர் அதிபர் திரு சிறிநிவாசன் என்பவர் தபாற் கந்தோருக்குள் கயிற்றினுல் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் இறந்து கிடக்கக்காணப்பட்டார். ஒரு வாரத்துக்கு முன் தபால் இலாக உயர் அதிகாரிகள் குறிப்பிட்ட இத் தபால் கந்தோரை திடீரென பரிசோதனை செய்ததாகவும் அதிகபணம் குறைந்து இருப்பது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது.

சங்கானைப் பொலிசார் தொடர்ந்து விசாரணை நடத்துகிறுர்கள்.

—

தாய்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆண்டுகளுக்குமுன்னர்நான் திருமணம் செய்தேன். எனக்கு 8 பிள்ளைகள் உண்டு. இம்மாதம் 15-ம் திகதி என இளைய மகளான சரஸ்வதி (23 வயது) வீட்டிலிருந்து காணுமல்போய் விட்டார். அதனுல் மரணமானவரை நான் அன்றிரவு கண்டித்தேன். 17-ம் திகதி எனது காணுமல்போன மகளை சரசாலையில் தேடி விட்டு வீடு வந்தபோது மரணமானவர் வீட்டுத் திண்ணையில் இறந்துகிடந்தார்.

மரணமானவரின் மூத்த மகளான சிவகாமி சாட்சியமளிக்கையில் மரணமான தனது தாயை, கைதுசெய்யப்பட்டிருக்கும் தனது தந்தை மூன்று தினங்களுக்கு முன்னர் அடித்ததைத் தான் கண்டதாகத் தெரிவித்தார்.

பிரேதபரிசோதனைசெய்த உதவிசட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். இலோகநாதன், மரணமானவரின் கண்ணொன்றில் காயமிருந்ததாகவும் வயிற்றுள் நச்சுத்திராவகம் இருந்ததாகவும்தெரிவித்தார்.

சாட்சிகள் முன்னுக்குப்பின் முரணுயிருந்ததால் தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்த மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம், பொலிசாரை புலன்விசாரணை செய்யுமாறு உத்தரவிட்டதோடு, மரணமானவரின் கணவனையும் பொலிஸ் பாதுகாப்பில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

காணுமல்போன இளம்பெண் இன்னமும் கண்டு பிடிக்கப்படவில்லை. பொலிசார் இவரைக் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளனர். [கா. நி]

தமிழில்பட்டம்பெற்றவருக்கு சிங்கள தராதரப்பத்திரம்

யாழ்ப்பாணம், திங்கள்

சித்த ஆயுர்வேத வைத்தியத்தை தமிழில் பயின்று பட்டம்பெற்ற தமிழ் மாணவர்களுக்கு சிங்கள தராதர பத்திரங்கள் வழங்க, ஆயுள்வேத கல்லூரி ஆஸ்பத்திரி சபை தீர்மானித்திருப்பதை அகில இலங்கை சித்தஆயுள்வேத வைத்திய சங்கம் கடுமையாக ஆட்சேபித்துள்ளது.

இச்சங்கத்தின் நிர்வாக சபைக் கூட்டத்தில் தமிழ் மாணவர்களுக்கு, சிங்களப் பத்திரம் வழங்க தீர்மானித்திருப்பதை எதிர்ப்பதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜுன் மாதம் 2-ம், 3-ம் தேதிகளில் நடைபெறவிருக்கும் 37-வது வருடாந்த கூட்டத்திலும், சிங்கள பத்திரம் வழங்கப்படுவதற்கு கடுமையான எதிர்ப்பு தெரிவிப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கல்விப்பகுதியினுல் நடாத்தப்படும் அரசாங்க பரீட்சைகளில் எந்த மொழி மூலம் பரீட்சைக்கு தோற்றுகிருர்களோ அதே மொழியிலேயே பத்திரங்கள் வழங்கப்படுகையில் ஆயுள்வேதப் பகுதியினர், இவ்விதம் தீர்மானிப்பது கண்டனத்திற்குரியதென்றும், அரசாங்கத்தின் மொழிக்கொள்கைக்கும் இது மாருனதென்றும், யாழ்ப்பாணம் லங்கா ஆயுள்வேத வைத்திய கல்லூரி அதிபர் டாக்டர் ஆர். ஈ. டபிள்யு. யோகரத்தினம் தெரிவித்தார்.

வவுனியாவில்

அழுகிய நிலையில் கிடந்த சடலம்

வவுனியா, ஞாயிறு

வவுனியா பகுதியிலுள்ள பாலைற்குளத்தில் குளக்கட்டுக்கருகாமையில் அழுகிய நிலையில் ஒரு சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இ சடலம் சுமார் ஒரு வாரகாலம், குளக்கட்டுக் கரையில் இருந்திருக்கவேண்டுமென்றும் அது ஒரு வயோதிபரின் சடலமென்றும், பொலிஸ் வட்டாரங்கள் கருதுகின்றன.

வவுனியா மாவட்ட பொலிசாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து பொலிஸ் கோஷ்டியினர் ஸ்தலத்துக்கு சென்று விசாரணை செய்தனர்.

டாக்டர் நாகரத்தினம் பிரேத பரிசோதனை செய்த பின் உடலில் எவ்வித மாற்றத்தையும் காணவில்லையென தெரிவித்தார்.

உடலிலுள்ள சில சந்தேகத்திற்குரிய உறுப்புக்கள், பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஜனுப் எம். சலாப்தீன், ஸ்தலத்தில் விசாரணை செய்தார்.

—

வேலைநிறுத்தம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

மானிப்பாய் தபால் ஊழியர் ஒருவர் கடமை நேரத்தில் தாக்கப்பட்டதைத் தொடர்ந்து மானிப்பாய் தபால் ஊழியர்கள் இன்று நடத்தவிருந்த வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது.

தபால் ஊழியர்சங்கத்தலைவரும், செயலாளரும் இது பற்றி நடவடிக்கை எடுப்பதாக வாக்குறுதி அளித்ததைத் தொடர்ந்தே வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது. இன்றுபொலிஸ் அதிபரையும் தபால் அத்தியட்சகரையும், தபால் ஊழியர் சங்கப் பிரதிநிதிகள் பேட்டிகாண்பார்கள்.

—

விவசாயி......

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

முறையில் விவசாயம் செய்யப்பட்டுள்ளதால்இம்முறை சிறுபோகத்திற்கு தண்ணீர் வசதி நிரம்ப உண்டென்றும், விவசாயிகள் உபஉணவு உற்பத்தியில் ஈடுபடவேண்டும் என்றும் வற்புறுத்திஞர்.

வவுனியாவில் விவசாய கடன் பெற்றவர்களில் கடனைத் திருப்பாதவர்களை விரைவில் கடனைத் திருப்ப வற்புறுத்துமாறு கிராம உத்தியோகஸ்தர்களை அவர் கேட்டுக்கொண்டார்.

பார்வதி கற்பழிப்பு:

பெரேராவுக்கு பிணை அனுமதி

வவுனியா, ஞாயிறு

பார்வதி கற்பழிப்பு வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டிருந்த வவுனியா உதவி பொலிஸ் அதிகாரி திரு. பெரேரா பிணையில் விடுதலை செய்யப்பட்டார். ஏற்கனவே பிணையில் செல்ல அனுமதி கோரியபொழுது இவருக்கு பிணை மறுக்கப்பட்டிருந்தது. அட்டோர்னி ஜெனரலுக்கு விண்ணப்பஞ் செய்ததைத் தொடர்ந்து ரூபா 2000 பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். வழக்கு சுப்ரீம் கோர்ட்டுக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அடுத்த பருவத்தில் விசாரணை நடைபெறும்.

—

வீடுகளில்.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை எம். பிக்கு கருத்தெல்லாம் பேய் என்ற மனுேபாவம் வந்துவிட்டது'' என்று கிண்டலாகப் பேசினுர்.

தமிழ்மக்களைப் பாதிக்கக்கூடிய எத்தனையோ நடவடிக்கைகளைப் பிரதமர் தமிழரசுக் கட்சியினரைக் கேட்காமலேயே எடுக்க அவையெல்லாவற்றையும் கட்சி பொதுச்செயலாளர் ஆதரித்துப் பேசுகின்றுர். இவர்களுடைய கேவல நிலையை பிரதமர் உள்ளூர நினைத்து சிரிப்பதை எண்ணும்போது தமிழ் மக்கள் வெட்கத்தால் தலைகுனியவேண்டும்.

பொருட்களின் தொகை கூட்டப்பட்டால் தமிழ்ர்கள் கடத்தல்காரர்களல்ல என்ற பெயரா? இந்தத் தொகை அதிகரிப்போ, இலங்கைமுழுதும் சட்டத்தைப் பரவலாக்குவதோ முக்கியமல்ல. பொலிஸ் இராணுவ அதிகாரத்தை உடன் ரத்துச் செய்யவேண்டும். இந்த சட்டம் வருமுன்னரேயே காங்கேசன் துறை, மயிலிட்டி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, பகுதிமக்கள் எவ்வளவோ இம்சைப்படுகையில் இச்சட்டமும் வந்தபின்னர் காரைநகரிலிருந்து சுண்டிக்குளம் வரையுள்ள மக்கள் அனுபவிக்கப்போகும் கஷ்டம் கொஞ்சநஞ்சமல்ல. இதைத்தான் நான் அன்றிலிருந்து இன்றுவரை எதிர்த்துவருகின்றேன். [கா. நி.]

இலங்கையிலே "ஈழநாடு" [illegible]
சேகில் [illegible] 68-ம் [illegible] 1968-ம்
[illegible] மே மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org